# ஆய்வுச் சுருக்கம்

பட்டிருப்பு கல்விவலய மண்முனை தென்எருவில்பற்றுக்கோட்டப் பாடசாலைகளில் வலுவூட்டப்பட்ட பாடசாலை மேம்பாட்டுத்திட்டங்கள் எந்தளவு விளைதிறனுடன் நடைமுறைப்படுத்தப்பட்டன என்பதைக் கண்டறியும் பிரதான நோக்கத்தை அடைவதற்காக 04 சிறப்பு நோக்கங்களும், 04 ஆய்வு வினாக்களும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வை வழிநடத்துவதற்கான எண்ணக்கருச் சட்டகம் வடிவமைக்கப்பட்டது. இவ்வாய்வானது தொகை மற்றும் பண்பு சார்ந்த ஆய்வு வடிவத்தை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாய்வு பட்டிருப்பு கல்விவலய மண்முனை தென்எருவில்பற்றுக்கோட்டத்தின் 37 பாடசாலைகளிலிருந்து 19 அதிபர்கள், 140 ஆசிரியர்கள், 32 பெற்றோர்கள் ஆகியோர் எளிய எழுமாற்று விகிதப்படையாக்கல் முறைமூலம் தெரிவு செய்யப்பட்டனர். அத்தோடு EPSI இணைப்பாளர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழுக்கள் ஆகியோர் எளிய எழுமாற்று முறைமூலம் தெரிவு செய்யப்பட்டனர். அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரிடமிருந்து லிக்கார்ட்டின் அளவுத்திட்டத்திற்கமைய தயாரிக்கப்பட்ட கட்டமைக்கப்பட்ட மூடிய வினாக்கொத்துக்கள் மூலம் தரவுகள் திரட்டப்பட்டன. EPSI இணைப்பாளர்கள், பெற்றோர்கள் ஆகியோரிடமிருந்து நேர்காணல் மூலமும், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களிடமிருந்து இலக்குக்குழு கலந்துரையாடல் மூலமும் தரவுகள் திரட்டப்பட்டன. இரண்டாம் நிலைத்தரவுகள் ஆவணப் பகுப்பாய்வு மூலம் திரட்டப்பட்டன. ஆய்வு கருவிகள் மூலம் திரட்டப்பட்ட தரவுகள் யாவும் தொகை சார்ந்த தரவுகளாக மாற்றப்பட்டு விபரண புள்ளிவிபரவியல் அடிப்படையில் M.s Excel, SPSS 16.0 மென்பொருள்கள் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு, அவற்றின் மீடிறன், சதவீதம், சராசரிச்சதவீதம், இடை, நியமவிலகல் ஆகியன கண்டறியப்பட்டன. அவை அட்டவணைகள், வட்டவரைபுகள், சலாகை வரைபுகள் மூலம் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாய்வின் பிரதான கண்டுபிடிப்புக்கள் வலுவூட்டப்பட்ட பாடசாலைமேம்பாட்டுத்திட்டத்தினை திட்டமிடுதல், நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றில் குறைபாடுகள், அதிபர்களின் எதிர்பார்ப்புக்கள் பூர்த்தி செய்யப்பட்டமை குறைவு.

இவ்வாய்வின் விதந்துரைப்புக்கள் அதிபர்கள், ஆசிரியர்கள், EPSI இணைப்பாளர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள் ஆகியோருக்கு வலுவூட்டப்பட்ட பாடசாலை மேம்பாட்டுநிகழ்ச்சித்திட்டத்தை திட்டமிடுதல், நடைமுறைப்படுத்தல் தொடர்பாக விழிப்புணர்வை வழங்குதல். குறிப்பாக அதிபர்களுக்கு EPSI தொடர்பாக விழிப்புணர்வையும் ஊக்குவிப்பையும் வழங்குதல், வலயக் கல்வி பணிப்பாளர் EPSI திட்டத்தினை விளைதிறனுடன் நடைமுறைப்படுத்தக் கூடியவாறு பாடசாலைகளை வலுவூட்டுதல் வேண்டும்.

# ABSTRACT

The main purpose of this research was to find out how effectively the Enhanced Programme for School Improvement is implemented in the Manmunai South Eruvil Pattu Education Division in Paddiruppu Education Zone. According to four special objectives and four research questions were formulated. Based on them, the concept map was created to conduct this research. This research was conducted using quantitative and qualitative research approach.

A total of 19 Principals, 140 teachers and 32 parents were selected using simple random ratified sampling method for the research. Further, 10 EPSI coordinators Members of School Development Executive Committee were selected using simple random sampling method from 37 schools in Manmunai South Eruvil Pattu Education Division in Paddiruppu Education Zone. Data was collected from principals and teachers using closed structured questionnaires with likerts scaled method. In order to collect data from EPSI coordinators and Members of School Development Executive Committee and parents interview and focus group discussion were carried out. The secondary data was collected by analyzing the relevant documents through desk review. Data collected were transformed into quantifiable data and their frequency, percentage, mean, standard deviation and average percentage were calculated using Ms Excel and SPSS 16.0 computer software. They have been presented in tables, pie charts and bar charts.

The main finding of this research are : lack of proper planning and implementation of Enhanced Programme for School Improvement and the meeting of expectations and needs of principals remains at a low level.

Recommendations of this research are : it is necessary to provide and awareness to the Principals, Teachers, Parents, EPSI coordinators and Members of School Development Executive Committee about Enhanced Programme for School Improvement. And also it is very important to make aware the Principals about such programme and encourage them to take part effectively. Further, Zonal Director should empower the schools to plan and implement such programmes.